**MARTHANDAM DIOCESAN BULLETIN**
For Private Circulation Only




பெப்ரவரி
08

Printed Matter

To

BOOK POST

If Undeliveried please return to ...


**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

# Bulletin

**Diocese of Marthandam**

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



**பெப்ரவரி 2**

## மாயல்தோ - நம் ஆண்டவரின் தேவாலய நுழைவு

மலர் 23 பெப்ரவரி 2026 இதழ் 02

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.02.2026 | Sunday | 7.00 am | Baptism and Holy Mass | Tirupur |
| 02.02.2026 | Monday | 4.00 pm | Baptism | Marthandam |
| 04.02.2026 - 10.02.2026 | Wednesday- Tuesday | | CBCI Meeting | Bengaluru |
| 11.02.2026 - 13.02.2026 | Wednesday- Friday | | Annual Retreat Diocese of Marthandam | SPARC - Trivandrum |
| 13.02.2026 | Friday | 3.00 pm | School Day | Kulapparai |
| 14.02.2026 | Saturday | 10.00 am | Anbiyam Meet of Diocese of Kuzhithurai | Chunkankadai |
| 15.02.2026 | Sunday | 11.00 am | Kumari Vincentian Annual Gathering | Nattalam |
| 16.02.2026 | Monday | 10.00 am | Graduation Day - MCC | Mariagiri |
| 17.02.2026 | Tuesday | 10.00 am<br>6.00 pm | Paper Presentation International Seminar<br>Homily | Nalanchirai<br>Vettumani Shrine |
| 18.02.2026 | Wednesday | 4.30 pm | Blessing of DSS Convent | Soosaipuram |
| 19.02.2026 | Thursday | 10.00 am | College Day - MCC | Mariagiri |
| 19.02.2026 | Thursday | 3.00 pm | Finance Council Meeting | Bishop's House |
| 23.02.2026 - 27.02.2026 | Monday - Friday | | Holy Episcopal Synod - Syro Malankara Catholic Church | Pattom |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 23 பெப்ரவரி 2026 இதழ். 02

**Patron**
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

**Editor**
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

**Cover Design**
*Mrs. Uni Kumari B.*

**Printing**
*Santhom Press,*
*Marthandam*

**Published By**
*The Chancellor*
*Diocese of Marthandam*






மலர். 23 ஜனவரி 2026 இதழ். 01

**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com



# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the Diocese of Marthandam




மலர். 23 பெப்ரவரி 2026 இதழ். 02

**முக்கியமான நாட்கள்**

**பெப்ரவரி 2026**

| | |
|---|---|
| 01 | இந்திய கடலோர காவல்படை தினம் |
| 02 | உலக ஈரநிலங்கள் தினம் |
| 04 | உலக புற்றுநோய் தினம் |
| 11 | உலக நோயாளிகள் தினம் |
| 14 | புனித காதலர் தினம் |
| 20 | உலக சமூக நீதி தினம் |
| 21 | சர்வதேச தாய்மொழி தினம் |
| 23 | உலக அமைதி மற்றும் புரிதல் தினம் |
| 28 | தேசிய அறிவியல் தினம் |

## உள்ளடக்கம்


1. Circular 03
2. மறைமாவட்ட குருக்களுக்கான திருவழிபாட்டு ஆண்டு பயிற்சி வகுப்பு 12
3. குருமட செய்திகள் 12
4. புனித தேவசகாயம் திருத்தல திருவிழா 14
5. சிறார் இயக்க ஆண்டு விழா 15
6. மறைபரப்பு தளச் செய்திகள் 15
7. மலங்கரை கத்தோலிக்க மறைக்கல்வி 16
8. மேரி மக்கள் துறவற சபை 17
6. MIDS 18
7. கொமித்சியச் செய்திகள் 20
8. Health for One Million (Hom) 21
9. MCA 22
10. MCYM 23
10. தாய்மார் சங்கம் (MCMF) 24
11. மார்த்தாண்டம் பைபிள் கன்வென்ஷன் 24
13. மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி, இலவுவிளை 25
14. திருமண ஆயத்தப்பயிற்சி 25
15. மறைவட்ட செய்திகள் 26
15. ஆயரின் ஜனவரி மாத நிகழ்வுகள் 28
16. இம்மாதம் நினைவு கூர 31
20. Bishop's Diary 32


*Printed by*
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852



# THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH

MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum - 695 004

Prot. No. CCL 1/2026 20.01.2026

**சுற்றறிக்கை**

## காதோலிக்கா தினம் - 2026

***மேதகு ஆயர்களே, வணக்கத்திற்குரிய கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, றம்பான்மார்களே, மதிப்பிற்குரிய குருக்களே, திருத்தொண்டர்களே, இருபால் துறவிகளே, ஆண்டவரில் அன்பிற்குரிய இறைமக்களே !***

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை சுயஆட்சி அதிகாரம் கொண்ட உயர் பேராயத் திருச்சபையாக உருவாக்கம் பெற்றதன் 21-ம் ஆண்டினை 2026 பிப்ரவரி 1-ம் நாளன்று காதோலிக்கா தினமாக கொண்டாடுகிறோம். கிறிஸ்துவின் மறையுடலே திருச்சபை. நாம் அனைவரும் அந்த உடலின் உறுப்புக்கள். கிறிஸ்துவின் திருச்சபையை கட்டியெழுப்ப நாம் அயராமல் உழைத்து வருகின்றோம். கடவுளின் கருணையும் இணைந்த செயல்பாடுகளும் அகில உலக திருச்சபையில் சான்று பகரும் ஒரு திருச்சபை சமூகமாக நாம் வளர்ந்து கொண்டிருக்கிறோம். கடவுளின் இரக்கத்திற்கும் கருணைக்கும் நன்றி செலுத்துவோம். “ஆண்டவரின் பேரன்பை முன்னிட்டும், மானிடரான அவர்களுக்கு அவர் செய்த வியத்தகு செயல்களை முன்னிட்டும் அவர்கள் அவர்களுக்கு நன்றி செலுத்துவார்களாக” (திருப்பாடல் 107:21). திருச்சபை சமூகத்தை கடவுளின் கரங்களில் ஒப்புக்கொடுத்து இறைவேண்டல் செய்வதற்காக பணிக்கப்பட்டிருக்கும் இந்த தினத்தில் திருச்சபையின் திருப்பணிகள் அனைத்தும் இறையாசீரால் நிறுவப்பட மன்றாடுவோம். நம்பிக்கையுடனும், அர்ப்பண உணர்வுடனும் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் திருப்பணிகளை திறன்படச் செய்ய

செபத்துடன் உறுதி எடுப்போம். காதோலிக்கா தினத்தின் வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் திருச்சபை மக்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை 1930-ம் ஆண்டு தொடங்கி வைத்த திருப்பணியை இன்று ஒரு திருச்சபை சமூகமாக தொடர்கிறோம். பாரதம் முழுவதும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டுமென்ற அடிநாதம் அவரை உண்மை திருச்சபையின் உறவொன்றிப்பில் கடந்து வர முண்டன்மலையை விட்டு இறங்கச் செய்தது. நற்செய்தி அறிவிப்பதற்காக அவர் தன் வாழ்க்கை பயணத்தில் எதிர்கொண்ட தியாகங்கள் ஏராளம். “கத்தோலிக்கர்களாக இருப்பதில் பெருமை கொள்ளுங்கள். உங்கள் தூய வாழ்வும், அறநெறிச் செயல்களும் கத்தோலிக்கர் அல்லாதோர்களின் வழி விளக்காக அமையட்டும். ஆண்டவராகிய மெசியாவை நீங்கள் உங்கள் வாழ்வில் பிரதிபலிக்கச் செய்யுங்கள்” வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை இறைமக்களுக்குக் கூறிய இறுதிச் சொற்களே இவை. அனைத்துலகத் திருச்சபையின் அங்கமாக இருந்து ஆண்டவர் இயேசுவை அறியாதோருக்கு நற்செய்தியின் தூதை பகிர்ந்திடவும் கத்தோலிக்கர் அல்லாதவர்களுக்கு நமது தூய வாழ்வாலும் அறநெறிச் செயல்களாலும் முன்மாதிரியாகி அவர்களை உண்மை நம்பிக்கைக்கு வழிநடத்தும் பணியையும் இம்மாபெரும் பேராயர் நம்மிடம் ஒப்படைத்துள்ளார். இத்திருப்பணியை பொறுப்புடன் தொடர்வது நமது கடமை.

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையானது பன்னிரெண்டு மறைமாவட்டங்கள், லண்டன் மாநகரை மலங்கரை மையமாகக் கொண்ட திருத்தூதுவ பார்வையாளரின் திருப்பணிகள், மேலும் சில நாடுகளில் அமையப்பெற்ற மறைப்பணி தளங்களாலும் அகில உலக கத்தோலிக்க திருச்சபையில் நற்செய்தியின் ஒளியை பகிர்ந்தளித்து கொண்டிருக்கின்றது. இத்திருச்சபையின் இன்றைய நிலைக்காக இடைவிடாமல் இறைவேண்டல் செய்பவர்களையும்,



செயல்பட்டவர்களையும் நன்றியுடன் நினைவுகூர்வோம். 1930-ம் ஆண்டு வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகை ஏற்றி வைத்த மறுவொன்றிப்பின் ஒளியை புதிய தலைமுறைக்கு பகிர்ந்தளிக்க உழைத்து இன்று நினைவில் வாழும் மேதகு ஆயர்கள், குருக்கள், துறவியர்கள், பொதுநிலையினர் அனைவரையும் கடவுளின் திருமுன் ஒப்புக்கொடுப்போம். சுய ஆட்சி உரிமையுள்ள உயர் பேராயத் திருச்சபை பதவியும் காதோலிக்கா அரியணையும் நமது திருச்சபைக்கு கிடைத்த சிறப்பு ஆசீர்களே. திருச்சபையின் இறையாசீர் கலந்த வளர்ச்சிக்காக தியாகம் நிறைந்த திருப்பணிகளை செய்த மேதகு ஆயர்களையும், இருபால் துறவியரையும், இறைமக்களையும் நன்றியுடன் நினைவுகூர்வோம்.

2030-ம் ஆண்டு மறுவொன்றிப்பின் நூற்றாண்டை நாம் காணவிருக்கின்றோம். அதுவரையுள்ள நாட்களில் திருச்சபையின் புதிதாக்கம் போன்ற பல்வேறு திருப்பணிகளை வலுப்படுத்தவும் நாம் முயற்சிக்க வேண்டும். இறைவார்த்தை ஆண்டு தூய ஆவியின் நிறைவில் இறைவார்த்தையில் மூழ்கவும், வாழவும் நமக்கு உதவியது. 2025 செப்டம்பர் 20 முதல் 2026 செப்டம்பர் 19 வரை திருவழிபாட்டின் ஆண்டாக கொண்டாடுகிறோம். திருச்சபை தந்தையர்கள் நம் தலைமுறைக்கு ஒப்படைத்த ஒப்பற்ற செல்வமே நமது திருவழிபாட்டு முறை. இத்தூய திருவழிபாட்டை பாதுகாத்து அது வழியாக கடவுளை மாட்சிப்படுத்த நாம் அழைப்பு பெற்றிருக்கிறோம். “இயேசு கிறிஸ்துவின் மறையுடலால், தலையாலும் அதன் உறுப்புக்களாலும் வெளிப்படையான முழு வழிபாடு நடத்தப்படுகின்றது. இதனால் தான் திருவழிபாட்டு கொண்டாட்டம் ஒவ்வொன்றும் திருப்பணியாளராகிய கிறிஸ்துவுனுடையவும் திருச்சபை என்னும் அவருடைய உடலினுடையவும் பணி என்ற முறையில் அனைத்திலும் உயர்த்த திருச்செயல் ஆகின்றது. தகுதியிலும் நிலையிலும் இச்செயலின் ஆற்றலுக்குத் திருச்சபையின் வேறு எந்த செயலும் இணையாகாது”

(SC 7). திருவழிபாட்டு ஆண்டை கொண்டாடும் தூயதும் புனிதமுமான திருவழிபாட்டின் ஆழங்களை அறியவும் அனுபவமாக்கவும் முயல்வோம். திருவழிபாட்டு ஆண்டு கொண்டாட்டத்தின் முயற்சிகளிலும் செயல்பாடுகளிலும் இறைமக்கள் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டுமென நினைவுபடுத்துகிறேன்.

நமது திருச்சபையின் 30-வது ஆயர் மாமன்றக் கூட்டம் 2026 பிப்ரவரி 23 முதல் 27 வரை காதோலிக்கேட் மையத்தில் வைத்து நடைபெறுகிறது. ஆயர் மாமன்றக் கூட்ட நிகழ்வுகள் ஆசீர்மிக்கதாக அமைய அனைவரும் இறைவேண்டல் செய்ய வேண்டுமென்று நினைவு படுத்துகிறேன். மலங்கரை திருச்சபையின் பல்வேறு திருப்பணிகளையும் ஆயர்மாமன்ற பணிக்குழுக்களின் செயல்பாடுகளையும் உயர் பேராயக் கூரியா அல்லது காதோலிக்கா மையம் ஒருங்கிணைத்து வருவது நீங்கள் அறிந்ததே. இந்த மையத்தின் செயல்பாடுகள் சபைமக்களின் உளமார்ந்த உதவிகளால் நடந்து வருவதும் நீங்கள் அறிந்ததே. காதோலிக்கா தினத்தில் சேகரிக்கப்படும் காணிக்கை இந்த கருத்துகளுக்காக மாற்றி வைக்கப்படுகிறது என்பதும் நீங்கள் அறிந்ததே. திருச்சபையின் பொதுவான திருப்பணிகளுக்காகவும் சிறப்பு திருப்பணிகளுக்காகவும் உங்கள் நன்கொடைகள் தாராள மனத்துடன் வழங்கவேண்டுமென்று சபை மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய பங்குத்தந்தையர்கள், பங்கு மக்களிடம் இதனை தெரிவித்து உற்சாகப்படுத்த வேண்டும். பங்குகள் மட்டுமல்ல நிறுவனங்களும், துறவற இல்லங்களும் அவற்றின் மாகாணங்களும் இம்முயற்சியில் பங்கேற்க வேண்டும். மறைமாவட்ட ஆயர்கள் தங்கள் மறைமாவட்ட காணிக்கைகளை சேகரித்து ஆயர் மாமன்ற தீர்மானத்தின்படி வழங்கப்பட வேண்டிய விகிதத்தை அடுத்து வரும் ஆயர் மாமன்ற கூட்டத்தில் ஒப்படைக்கவேண்டும். துறவற சமூகங்களின் தலைவர்களும், மாகாணத் தலைவர்களும் தங்கள் சமூகங்களின் நன்கொடைகளை ஆயர் மன்ற கூட்டத்திற்கு முன்னதாக காதோலிக்கேட் மைய நிதி



அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். கடந்த ஆண்டுகளில் இம்முயற்சியில் தாராள மனத்துடன் பங்கேற்ற அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்து பாராட்டி மகிழ்கின்றேன்.

காதோலிக்கா தினத்தில் திருப்பலிக்குப் பின் நம் பங்குகளிலும், நிறுவனங்களிலும், மறைப்பணி தளங்களிலும், காதோலிக்கா திருக்கொடி உயர்த்தி உறுதிமொழி எடுக்க வேண்டும். இத்தருணத்தில் உலகின் பல்வேறு பகுதிகளில் நம் திருச்சபையின் திருப்பணிகளில் திறன்பட செயலாற்றும் ஆயர் பெருமக்களையும், குருக்களையும், துறவிகளையும், பொதுநிலையினரையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து அவர்களுக்காக இறைவேண்டல் செய்வோம்.

கடவுளின் அருளும், இரக்கமும் உங்கள் அனைவர் மேலும் மிகுதியாக இறங்கி தங்குவதாக.

இவண்,
ஆண்டவரில் உங்கள் எளிய ஊழியன்,

+Baselios Cleemis

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
உயர் பேராயர் மலங்கரை கத்தோலிக்கத்
திருச்சபையின் காதோலிக்கோஸ்

காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை

# MCCL தினம்

## பெப்ரவரி 08 ஞாயிற்றுக்கிழமை 2026

## (மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்கம்)

### நம்பிக்கை பயிற்சிக்கான ஆயர் மாமன்ற பணிக்குழு தலைவரின் செய்தி

***மேதகு ஆயர்களே, கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, மதிப்பிற்குரிய அருட்தந்தையர்களே, துறவிகளே, மறைக்கல்வி ஆசிரியர்களே, பெற்றோர்களே, அன்புக் குழந்தைகளே,***

மேதகு ஆயர்களே, கோர்எப்பிஸ்கோப்பாமார்களே, மதிப்பிற்குரிய அருட்தந்தையர்களே, துறவிகளே, மறைக்கல்வி ஆசிரியர்களே, பெற்றோர்களே, அன்புக் குழந்தைகளே,

பிப்ரவரி 8, 2026 ஞாயிற்றுக்கிழமையை நாம் மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்க தினமாக கொண்டாடுகிறோம்.

இந்த இயக்கத்தை சிறார்களுக்கான நம்பிக்கைப் பயிற்சியின் செயல்முறை பாடசாலையாக நாம் வகைப்படுத்தியுள்ளோம். நமது ஒவ்வொரு சிறார்களும் திருவழிபாட்டில் உண்மை நம்பிக்கையை அறியிக்கையிடவும் அதனுடைய நன்மைகளை அனுபவமாக்கவும் செய்கிறார்கள். மறைக்கல்வி வகுப்புகளில், நம்பிக்கையை ஆழத்தில் புரிந்துகொள்ள முயல்கிறோம். அதே நம்பிக்கையை சக மனிதர்களுடன் பகிர்ந்துகொள்ளவும், அதை வாழவும் வேண்டிய அடிப்படை பயிற்சி குடும்பங்களில் வழங்கப்படுகிறது. சமூக மற்றும் திருச்சபை சார்ந்த தளத்தில் இந்த செயல்முறை பயிற்சியை சிறார் இயக்கம் உன்னத நிலையில் தொடர்கிறது.

கிறிஸ்தவ நம்பிக்கையை ஏற்றுக்கொண்டோர் பின்பற்ற வேண்டிய சமூக ஒழுங்குமுறைகளைப் பற்றி தூய பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகம் 12-ம் அதிகாரத்தில் அறிவுறுத்துகிறார். “கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக



உங்களைப் படையுங்கள்” என அறைக்கூவல் விடுத்துக் கொண்டே தூய பவுல் தனது அறிவுறுத்தலுக்கு துவக்கமிடுகிறார் (உரோ 12:1). எவரும் தம்மை குறித்து மட்டும் எண்ணாமல் ஒரே உடலாக வாழ வேண்டும். ஒவ்வொருவருக்கும் அருளப்பெற்ற அருட்கொடைகளும் வரங்களும் பிறரின் நன்மைக்காக பயன்படுத்த வேண்டும், ஒருவரை ஒருவர் உளமாற அன்புச் செய்ய வேண்டும். துன்பங்களில் துவண்டுபோகாமல் பொறுமையாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும். ஒருவரை ஒருவர் மன்னிக்கவும் தீமைக்கு பதில் தீமை செய்யாமல் நன்மையில் உறுதியாக நிலைத்து நிற்கவும் முயல வேண்டும். இவையே இந்த அதிகாரத்தில் திருத்தூதர் பரிந்துரைக்கும் வாழ்க்கை முறையின் முக்கிய உள்ளடக்கம்.

நம் சிறார்கள் ஒருவருக்கொருவர் போட்டியிடவும், சுயநலமாக இயங்கவும், பிறர்மேல் வெறுப்பை பொழியும் பயிற்சியை அளிக்கும் கலாச்சாரத்தால் சூழப்பட்டிருக்கிறார்கள். உண்மையான மனித உறவுகளின் உட்பொருளை உணர்ந்து கொள்ளாமல், அவரவர் சுய விருப்பத்திற்கேற்ப கட்டியெழுப்பக்கூடிய இணைய நட்புகளுக்கு அடிமைகளாக மாறுகிறார்கள். தங்கள் சொந்த மகிழ்ச்சியை மட்டுமே அவர்கள் விலை மதிக்கிறார்கள். எல்லா மகிழ்ச்சியையும் விலைகொடுத்து வாங்கலாம் என்று வீணாக கனவு காண்கிறார்கள். இச்சூழலில் தூய பவுல் பரிந்துரைக்கும் கிறிஸ்தவ சமூக பார்வையின் பாடல்களை நம் சிறார்களுக்கு பயிற்றுவிக்க வேண்டியது மிகவும் அவசியம். MCA மற்றும் MCYM போன்ற இயக்கங்கள் இதை செயல்படுத்துவதையே இலக்காக கொண்டுள்ளன.

தங்களுக்குரிய உலகில் சிக்கி தவிக்கும் புதிய தலைமுறையினருக்கு ஒத்துழைப்பு என்பது அவசரமான ஒன்றாகும். அவர்கள் ஒன்றிணைந்து ஒரேச் செயலை செய்வதும், ஒருவரை ஒருவர் வலுப்படுத்துவதும் கடினமாகிவிட்டது. சிறார் இயக்கத்தின் செயல் திட்டங்களான இணைந்து ஜெபித்தல், தொண்டாற்றுதல், கலைத்திறன் பயிற்சி போன்றவை அடிப்படையான ஒத்துழைப்பு மனப்பான்மையை வார்த்தெடுப்பதற்கு பங்களிக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், சமூகம் சார்ந்த நெறிமுறைகளைக் கற்றுக்கொள்ளவும் பாரம்பரிய மரியாதை பாணியை வளர்தெடுக்கவும் சிறார் இயக்க செயல்பாடுகள் பெரிதும் உதவுகின்றன. தூய பவுல் நம்மை நினைவூட்டுவது போல "அனைத்தும் பாங்காகவும் ஒழுங்காகவும் நடைபெறவும் வேண்டும்" (1 கொரி 14:40) வேண்டிய அடிப்படை பயிற்சியை இவ்வியக்கம் வாயிலாக சிறார்கள் பெற்றுக்கொள்கிறார்கள்.

அன்பு மற்றும் சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக வாழ்வை நடைமுறைப்படுத்துவதற்கு தியாகம் மற்றும் அர்ப்பணிவு மிகவும் அவசியமாகும். ஆகையால் தான் தூய பவுல் அந்த வாழ்க்கை முறையை உயிருள்ள தியாகம் என்று வருணிக்கிறார். இந்த உயிருள்ள தியாகமே உண்மையான கிறிஸ்தவ வழிபாடு என்று தூய பவுல் தொடர்ந்து கூறுகிறார் (உரோ 12:1). திருமுழுக்கு மற்றும் நற்கருணையை உள்ளடக்கிய அருளடையாள வாழ்க்கை மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் அருட்கொடையே கிறிஸ்தவத்தின் அனைத்து நன்மைக்கும் அடிப்படை என்று தூய பவுல் எடுத்துரைக்கிறார் (உரோ 6:1-14, 1 கொரி 11:21-34). அருளடையாள வாழ்வை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக ஒழுங்கையே பலி மற்றும் வழிபாடாக திருத்தூதர் கருதுகிறார் என்பது தெளிவாகிறது.

மலங்கரை கத்தோலிக்க திருச்சபை மறுவொன்றிப் படைந்ததன் நூற்றாண்டு விழாவிற்கு தயாராகும் வகையில் திருவழிபாட்டு ஆண்டை அனுசரிக்கும் தருணம் இது. இந்த ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக திருவழிபாட்டின் பல்வேறு பன்முகங்களை ஆழத்தில் அறிந்துகொள்ள உதவும் செயல்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. "ஆவியிலும் உண்மையிலும் ஆண்டவரை ஆராதிப்போம்" (யோவா 4:23) என்பதே இவ்வாண்டின் மையச்சிந்தனை. திருவழிபாட்டு ஆண்டின் செயல்பாடுகள் திருவழிபாட்டை இன்னும் ஆழமாக புரிந்துக்கொண்டு நம்பிக்கையில் ஆழப்படவும், திருவழிபாட்டில் பக்தியுடன் பங்கேற்கவும் உதவும்.



திருவழிபாட்டின் மூலம் இறையருளை பற்றிய சிறார்களின் புரிதலை ஆழப்படுத்தும் வகையில் இச்செயல் திட்டங்களை மேற்கொள்வோம்.

திருசச்பை தளத்திலிருந்து கிடைக்கப்பெறும் அறிவுறுத்தல் களோடு இணைந்து மறைமாவட்ட தளத்தில் நிகழ்வுகளை ஒழுங்கமைத்து செயல்படுத்துமாறு MCCL பொறுப்பாளர்களை நினைவூட்ட விரும்புகிறேன்.

இச்சூழலில், பிப்ரவரி 8-ம் நாள் மறைமாவட்ட இயக்குநர்கள் மற்றும் பங்கு தந்தையர்களின் அறிவுறுத்தல்களின்படி பொருள்செறிந்த நிகழ்வுகளுடன் MCCL தினம் கொண்டாட வேண்டும் என உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஒப்புரவு மற்றும் நற்கருணை பலியில் உள்ளார்ந்த பங்கேற்பு, பொதுகூட்டங்கள், ஆய்வு மன்றங்கள் மற்றும் திருவழிபாட்டு ஆண்டு கொண்டாட்டம் தொடர்பான சிறப்பு நிகழ்வுகள் போன்றவை இத்தினத்தின் ஒரு பகுதியாக மாற சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

நமது திருச்சபை சமூகங்கள், பங்குதந்தையர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சிறார்கள் ஆகியோர் MCCL -க்கு அளிக்கும் ஆதரவுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வழிகாட்டுதல் வழங்கும் மதிப்பிற்குரிய பங்கு தந்தையர்கள் மற்றும் வழிகாட்டிகளை மனமாற பாராட்டுகிறேன்.

இரக்கமிகு இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*அன்புடன்,*

+ Eusebius

† மேதகு ஆயர் **தோமாஸ் மார் எவுசேபியோஸ்**
விசுவாச பயிற்சிக்கான ஆயர்மாமன்ற பணிக்குழு தலைவர்

# மறைமாவட்ட குருக்களுக்கான திருவழிபாட்டு ஆண்டு பயிற்சி வகுப்பு

திருவழிப்பாட்டு ஆண்டை முன்னிட்டு மறைமாவட்ட குருக்களுக்கான மாதாந்திர தியானம் மற்றும் திருவழிப்பாட்டு ஆண்டு சிறப்புப் பயிற்சி வகுப்பானது ஜனவரி 13, 2026 அன்று காலை 9 மணி முதல் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இந்த சிறப்பு பயிற்சி வகுப்பை மலங்கரை கத்தோலிக்க திருச்சபையின் கூரியா ஆயர் மேதகு ஆன்றணி மார் சில்வானோஸ் ஆண்டகை அவர்கள் வழிநடத்தினார்கள்.

இப்பயிற்சி வகுப்பில் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து அருட்தந்தையர்களும் பங்கேற்றார்கள். இவ்வகுப்பானது மறைமாவட்ட குருக்களின் ஆன்மீக வளர்ச்சி மற்றும் திருப்பணி ஆழமாக்கத்திற்கான சிறப்பான வாய்ப்பாக அமைந்தது.

# குருமட செய்திகள்

❖ 22.12.2025 அன்று குருமடத்தில் கிறிஸ்துமஸ் விழா ஆன்மீக மகிழ்ச்சியுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு நம் மறைமாவட்ட ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமை வகித்தார்கள். குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் பிறைட், ஆன்மீகத் தந்தை பேரருட்தந்தை ஜேசு மாரியான், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், முதல் ஆண்டு அருட்சததோரர்களின் பெற்றோர் மற்றும் அனைத்து உயர் குருமட அருட் சககோதரர்களும் கலந்துக் கொண்டு விழாவை நன்முறையில் சிறப்பித்தனர். அருட் சகோதரர்களின் அருமையான கலை நிகழ்ச்சிகள் விழாவில் சிறப்பு கவனத்தை ஈர்த்தன.



❖ **பொங்கல் திருநாள் கொண்டாட்டம்** : தமிழர்களின் பாரம்பரிய திருநாளான பொங்கல் பண்டிகை 14.01.2026 (புதன்கிழமை) அன்று குருமடத்தில் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. அந்நன்னாளை சிறப்பிக்கும் வகையில் அருட்தந்தை ரெஜின் அவர்கள் திருப்பலி அர்ப்பித்து, இறைவனுக்கு நன்றி ஜெபம் செய்தார்கள். தொடர்ந்து அருட்தந்தை சதீஷ் அவர்கள் பொங்கல் விழாவிற்கு தலைமை வகித்து அர்த்தமுள்ள சிறப்புரையாற்றினார்கள். அதிபர் தந்தை, துணை அதிபர் தந்தை மற்றும் அருட்சகோதரர்கள் அனைவரும் இணைந்து பொங்கல் வைத்து, பாரம்பரிய ஒற்றுமையுடனும் மகிழ்ச்சியுடனும் இப்பண்டிகையை கொண்டாடினார்கள்.

❖ **குருமட அதிபர் தந்தையின் நாமவிழா** : 20.01.2026 அன்று குருமட அதிபர் தந்தையின் நாமவிழா திருப்பலி நடைபெற்றது. கலைநிகழ்ச்சிகளுடன் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அருட்தந்தை சதீஷ் மற்றும் அருட்தந்தை ஹெபின் ஆகியோர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள். அருட்தந்தை அஜேஷ் அவர்கள் அனைத்து நிகழ்வுகளையும் முன்நின்று ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தினார்கள்.

❖ **குடியரசு தின விழா மற்றும் தூயக பணியாளர்கள் தினம்** : 26.01.2026 அன்று குருமடத்தில் தேசியக்கொடி ஏற்றி குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற தூயக பணியாளர் களுக்கான கூடுகையில் அருட்சகோதரர்கள் அனைவரும் ஆர்வத்தோடும் பொறுப்புணர்வோடும் பங்கேற்றனர். இவ்வாறு ஜனவரி மாதம் முழுவதும் ஆன்மீக வளர்ச்சியும், சமூகப் பங்களிப்பும், பாரம்பரிய விழாக்களும் இணைந்த ஒரு பயனுள்ள மாதமாக குருமடத்தில் அமைந்தது.

# புனித தேவசகாயம் திருத்தல திருவிழா

பெருவிளை புனித தேவசகாயம் திருத்தல திருவிழா ஜனவரி 12-ஆம் தேதி மாலை ஜெபமாலை மற்றும் மாலை ஜெபத்துடன் ஆரம்பமானது. நமது மறைமாவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை ஜோஸ்பிறைட் அவர்கள் கொடியேற்றி திருத்தல திருவிழாவை துவங்கி வைத்தார். அத்துடன் அன்றய கூட்டுத்திருப்பலிக்கு பேரருட்தந்தை ஜோஸ்பிறைட் அவர்கள் தலைமை தாங்கினார். இரண்டாம் நாள் திருவிழா 13-ம் தேதி ஜெபமாலை, மாலை ஜெபம், கூட்டுத்திருப்பலி மற்றும் நவநாள் என சிறப்பாக கொண்டாடப்பட்டது. கூட்டுத்திருப்பலியில் பேரருட்தந்தை மரிய அற்புதம் தலைமை தாங்கினார். அதோடு ஆசிர்வாதம் மிகுந்த நற்செய்தி பெருவிழாவானது அருட்தந்தை அனில் ராஜ் (தக்கலை மறைமாவட்டம்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மூன்றாவது நாள் திருவிழாவானது 14-ஆம் தேதி காலை 9 மணிக்கு ஜெபமாலை மற்றும் காலை ஜெபத்துடன் துவங்கியது. நமது மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் கூட்டுத் திருப்பலியும் அதைத்தொடர்ந்து புனிதரின் நவநாளும் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வுகளில் எல்லாம் பல இடங்களில் இருந்து இறைமக்கள் கலந்து கொண்டு இறையாசீர் பெற்று சென்றனர்.



# சிறார் இயக்க ஆண்டு விழா

மார்த்தாண்டம் மறைமாவட்ட சிறார் இயக்கத்தின் சார்பில் ஜனவரி 11 -ஆம் தேதி சிறப்பாக ஆண்டு விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமை வகித்து தமது அருளுரையால் விழாவை சிறப்பித்தார்கள். மேலும், அருட்தந்தை ஷிஜூ ஜோஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறார்களை உற்சாகப்படுத்தும் வகையில் உரையாற்றினார்கள். இந்த ஆண்டு விழாவின் சிறப்பம்சமாக சிறார்களுக்கான நடனப் போட்டி, பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஆண்டு விழா நிகழ்வுகள் மிகுந்த உற்சாகத்துடன் அழகாக நடைபெற்றன. சிறார்கள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் வழங்கிய நிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன. இவ்வாண்டு விழா, சிறார்களின் ஆன்மிக வளர்ச்சியையும், ஒற்றுமையையும், படைப்பாற்றலையும் ஊக்குவிக்கும் வகையில் அமைந்து, அனைவரின் பாராட்டுகளையும் பெற்று நல்ல முறையில் நிறைவடைந்தது.

# மறைபரப்பு தளச்செய்திகள்

## தேவதானப்பட்டி மறைபரப்பு தளம்

- ஜனவரி 23-ம் தேதி அருட்தந்தை ஜீன் ஜோஸ் அவர்களோடு இணைந்து 33 ஜெர்மனி நாட்டவர்கள் தேவதானப்பட்டி மறைபரப்பு தளத்தை சந்தித்து தங்கள் அன்பை பகிர்ந்து கொண்டனர்.

# மலங்கரை கத்தோலிக்க மறைக்கல்வி
## மார்த்தாண்டம் மறைமாவட்டம்

**மறைக்கல்வி மாணவர் சங்கமம் :**

மறைமாவட்ட மறைக்கல்வி மாணவர் சங்கமம் 16.01.2026 அன்று இலவுவினை மார் எஃப்ரேம் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களின் கருத்துரை, திருவழிபாட்டுப் புதிர் இவைகளோடும் மதிய உணவுக்குப்பின் அருட்தந்தை டார்பெல்லோ கிறிஸ்டஸ் அவர்களின் இசைவழி, இறைவழி என்ற சிறப்பு நிகழ்வுடன் நடந்தேறியது. நிறைவு விழா பொதுக்கூட்டத்திற்கு குருகுல முதல்வர் மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையுரை வழங்கினார். இயக்குநர் அருட்தந்தை ஷிஜூ ஜோஸ் அவர்களின் வாழ்த்துரையுடனும், செயலர் திரு. மரிய நோபர்ட் அவர்களின் நன்றியுரையுடனும் சங்கம விழாவானது நிறைவு பெற்றது. இக்கூடுகைக்கு 800-க்கும் அதிகமான மாணவர்களும், 150-க்கும் அதிகமான ஆசிரியர்களும் பங்கு பெற்றனர்.

**மறைக்கல்வி ஆசிரியர் சங்கமம் :**

மறைமாவட்ட மறைக்கல்வி ஆசிரியர்களின் சங்கமவிழா 26.01.2026 அன்று குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்றது. தமிழக மறைக்கல்வி பணிக்குழு செயலர் அருட்தந்தை பெனடிக்ட் M.D. அனலின் அவர்களின் கருத்துரைகளோடு, திருவழிபாட்டு புதிர் நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. தொடர்ந்து மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களின் தலைமையிலான நிறைவு விழா கூட்டத்தில் மறைக்கல்வி பணியில் 25 ஆண்டுகள் தொடர்ந்து மறைக்கல்வி ஆசிரியராக பணிபுரிந்து வரும் மங்காடு பங்கின் திரு. வர்கீஸ், வலியவிளை பங்கின் திருமதி ஜேஸ்பின், கிராத்தூர் பங்கின் திருமதி வினிதா மேரி, திருமதி லில்லி பாய், கிறிஸ்துராஜபுரம் பங்கின் திருமதி கில்டா அசிஸ், சூசைபுரம் பங்கின் திருமதி ஜோஸ்பின் நிர்மலா ஆகியோரை மேதகு ஆயர் அவர்கள் வாழ்த்தி நினைவு பரிசும் கொடுத்து கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு மாணவர் சங்கம விழாவில் நடைபெற்ற திருவழிபாட்டு புதிர் நிகழ்வில் வகுப்பு வாரியாக முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு மேதகு ஆயர் அவர்கள் பரிசு வழங்கி சிறப்பித்தார்கள்.



# மேரி மக்கள் துறவற சபை


அருட்சகோதரி **ஹைசிந் டி.எம்** (86)

மேரி மக்கள் (DM) துறவற சபையில் புனித சூசையப்பர் மாகாண உறுப்பினரான அருட்சகோதரி ஹைசிந் டி.எம் (86) ஜனவரி மாதம் 5-ஆம் தேதி இறைவனடி சேர்ந்தார்.

மாவேலிக்கரை மறைமாவட்டம் பெருங்கனாடு பங்கில் பாப்பாடியில் வீட்டில் காலம் சென்ற திரு. செறியான்தோமஸ் திருமதி ஏலியாம்மா தம்பதியினரின் மூன்றாவது மகள் தான் அருட்சகோதரி ஹைசிந் டி.எம் அவர்கள். இவரின் உடன் பிறந்தோர் 2 சகோதரர்களும், 3 சகோதரிகளும் உள்ளனர். இவரில் அருட்தந்தை ஆப்ரஹாம் பாப்பாடி மலங்கரை சபையில் மாவேலிக்கரை மறைமாவட்டத்தில் அருட்தந்தையாக பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அருட்சகோதரி ஹைசிந் டி.எம் அவர்கள், மார்த்தாண்டம், வெண்ணியூர், கிராத்தூர், இளையாங்கண்ணி, விமலபுரம் போன்ற இடங்களில் பள்ளிக்கூடங்களில் ஆசிரியையாகவும் அசிசி நிலையம், பாத்திமா நகர், செல்லங்கோணம், ஆற்றூர், புஷ்பகிரி, ஆலஞ்சோலை, போன்ற இடங்களில் மறைபரப்பு பணியாளராகவும், துறவற இல்ல தலைமை அருட்சகோதரியாகவும், மார்த்தாண்டம் விமலா பால பவன் தலைமை அருட்சகோதரியாகவும், இருந்து செயல்பட்டார்கள்.

அருட்சகோதரி ஹைசிந் டி.எம் அவர்களின் கல்லறை அடக்கம் 07.01.2026 அன்று மதியம் 2.00 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மார்த்தாண்டம் மேரி மக்கள் மாகாண இல்ல கல்லறை தோட்டத்தில் வைத்து நடைபெற்றது.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## தன்னார்வலர் பயிற்சி

உலகபுற்றுநோய் தினத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் மிட்ஸ் சார்பாக நடத்தப்படும் விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கு தன்னார்வலர்களை தயார்படுத்தும் விதமாக 28.01.2026 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் அருட்தந்தை முனைவர் பிரான்சிஸ் சேவியர் நெல்சன் அவர்களால் "மன உறுதியே புற்றுநோய் அரண்" என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. பின்னர் பிப்ரவரி 1-ம் தேதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கான வழிகாட்டுதல்களும், நோட்டீஸ்களும் வழங்கப்பட்டன. இந்த பயிறசியில் 50-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

## புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம்

அகில உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு மிட்ஸ் நிறுவனம் சார்பாக பிப்ரவரி மாதம் 1-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி முதல் 6 மணிவரை கன்னியாகுமரி மாவட்டத்தின் மிட்ஸ் பணி மண்டலங்களுக்குட்பட்ட 127 பகுதிகளில் வைத்து புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இந்த பிரச்சாரத்தில் அருட்தந்தையர்கள் அருட்கன்னியர்கள்,



மருத்துவர்கள், அரசியல் பிரமுகர்கள், மிட்ஸ் பணியாளர்கள் மற்றும் மிட்ஸ் உறுப்பினர்கள் ஆகியோர் தன்னார்வத்துடன் கலந்துகொண்டு இந்த பிரச்சாரத்திற்கு வலுவூட்டினர்.

## பிறநிகழ்வுகள்

1. 20.01.2026 அன்று கோல்பிங் சார்பாக காஞ்சிபுரத்தில் வைத்து தேசிய அளவிலான ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் ஒருங்கிணைப்பாளர் திரு. சஜிக்குமார் ஆகியோர் கலந்துகொண்ட இந்த கூட்டத்தில் கோல்பிங் செயல்பாடுகளை சிறந்த முறையில் செய்து வருவதற்காக மிட்ஸ் நிறுவனத்திற்கு விருது வழங்கப்பட்டது.

2. 24.01.2026 அன்று கோல்பிங் சார்பாக ஜெர்மெனி நாட்டிலிருந்து 32 நபர்கள் மிட்ஸ் அலுவலகத்திற்கு வருகை தந்து கோல்பிங் மற்றும் மிட்ஸ் செயல்பாடுகளை பார்வையிட்டனர். அவர்களை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் மிட்ஸ் பணியாளர்கள், கோல்பிங் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தளிர்கள் உலக பயனாளிகள் வரவேற்று உபசரித்து கவுரவித்தனர்.

3. 25.01.2026 அன்று தளிர்கள் உலகம் மாணவர்களுக்கான அறிவுத்திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், மரியகிரி, நாகர்கோவில் மற்றும் ஆற்றூர் ஆகிய பகுதிகளில் வைத்து நடத்தப்பட்டது. இந்த தேர்வினை 83 மாணவமாணவிகள் எழுதினர்.

மரியாயின் சேனை

# கொமித்சியச் செய்திகள்

### ✦ ஆண்டுவிழா

மார்த்தாண்டம் கொமிச்சியத்தின் 2025-ஆம் ஆண்டின் ஆண்டுவிழா 18.01.2026 ஞாயிறு அன்று மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுவ முதல்வர் மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையில் தடைபெற்றது. துணைத்தலைவர் Br. பிபிஸ்குமார் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள், துணைச்செயலர் Sr. கவிதா அவர்கள் 2025-ஆம் ஆண்டின் ஓராண்டு அறிக்கையினை வாசித்தளித்தார்கள் மோண். ஜோஸ் பிறைட் அவர்கள் மரியாள், மரியாயின் சேனை குறித்து சிறப்புரையாறினார்கள். ஆன்ம இயக்குநர் அருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். மார்த்தாண்டம், மரியாகிரி, கிராத்தூர் கியூரியாக்கள் கலைநிகழ்ச்சிகள் நடத்தின. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் கலந்துகொண்ட அனைவருக்கும் ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன. செயலர் Br. ஜெயபின் சர்மா அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். வினாடி வினா போட்டிகளுக்கு மூன்றாம் மற்றும் ஆறுதல் பரிசுகளை மறைமாவட்ட பொருளர் அருட்தந்தை தேவதாஸ் அவர்கள் அன்பளிப்பாக கொடுத்தார்கள். அவர்களுக்கும் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகள்.

### ✦ கருத்தரங்கு

மார்த்தாண்டம் கொமித்சியம் சார்பில் கருத்தரங்கானது 17.01. 2026 ஞாயிறு அன்று குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்றது. விமலபுரம் பங்குத்தந்தை அருட்தந்தை விபின்ஸ் வில்சன் அவர்கள் “நம்பிக்கையாளர்களின் அன்னை” என்ற தலைப்பில் சிறப்பான முறையில் கருத்துரை வழங்கினார்கள். இக்கருத்தரங்கில் 80 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

### ✦ தவக்கால தியானம்

நமது கொமித்சியத்தின் சார்பில் நடைபெறும் தவக்கால தியானம் 21.03.2020 சனிக்கிழமை அன்று விமலபுரம் பங்கில் வைத்து நடைபெறும். மரியாயின் சேனையார் அனைவரும் உங்கள் பங்கு மக்களோடு சேர்ந்து வருகை தந்து பயன்பெறும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

## HEALTH FOR ONE MILLION (HOM)

**Diocese of Marthandam**

- ❖ 2025 டிசம்பர் மாதம் 28-ம் தேதி மார்த்தாண்டம் மறைமாவட்ட மருத்துவர்கள் கூடுகையானது குழித்துறை மார் எப்ரேம் வளாகத்தில் வைத்து நடைபெற்றது. இதில் 50 நபர்கள் கலந்துகொண்டார்கள்.
- ❖ 2026 ஜனவரி மாதம் 05-ம் தேதி தமிழக ஆயர் பேரவை நலவாழ்வு பணிக்குழு செயலர்களுக்கான வருடாந்திர கூடுகை தக்கலை ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இதில் 22 நபர்கள் கலந்துகொண்டார்கள்.
- ❖ 2026 ஜனவரி மாதம் 21-ம் தேதி அன்று மார்த்தாண்டம் அலகின் HOM சுய உதவிக் குழுவில் இயற்கை மருத்துவம் மற்றும் மூலிகை குறித்த விழிப்புணர்வு கூட்டம் உண்ணாமலைக்கடை பங்கில் வைத்து நடைபெற்றது. இதில் 15 நபர்கள் கலந்துகொண்டார்கள்.
- ❖ 2026 ஜனவரி மாதம் 20-ம் தேதி அன்று படுக்கை நோயாளிகள் நலஉதவி குழித்துறையில் வைத்து நடைபெற்றது. இதில் 35 நபர்கள் கலந்துகொண்டார்கள்.

# MCA
## Diocese of Marthandam

### 2026-ம் வருட முதல் மேலாண்மை குரு கூட்டம் :

மலங்கரை கத்தோலிக்க இயக்கம் மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் 2025-ம் வருடம் முழுவதும் பல செயல்பாடுகள் மேற்கொண்டு பொதுநிலையினரின் மறைதூதுப்பணியை நிறைவேற்றப்பட்டது. 2026-ம் ஆண்டின் முதல் மேலாண்மை குழு கூட்டம் 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு குறித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில் அமைந்து உள்ள MCA அலுவலகத்தில் நடைபெற்றது. அன்றைய தினம் ஓராண்டு அறிக்கை இறுதி செய்து சபையளவிலான கூடுகைக்கு ஆங்கிலத்தில் வழங்க தீர்மானிக்கப்பட்டது. அன்றைய கூடுகையில் MCA புரவலர் மேதகு ஆயர் அவர்கள் வருகை தந்து மறைமாவட்டத்தில் பொதுநிலையினரின் செயல்பாடுகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாக ஆலோசனைகளும், அறிவுரைகளும் வழங்கியதோடு தொடர்ந்து செயல்பட ஆசியும் வழங்கினார். ஆன்மீக இயக்குர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் 18 பேர் கலந்துகொண்டனர்.

### சபையளவிலான ஓராண்டு அசம்பிளி கூடுகை

சபையளவிலான மலங்கரை கத்தோலிக்க இயக்கத்தின் ஓராண்டு கூடுகையானது பெத்தேரி மறைமாவட்டத்தில் நிலம்பூர் எடகரை மறைவட்டத்தில் பாத்திமா கல்லூரியில் வைத்து 25.01.2026 மற்றும் 26,02,2026 ஆகிய இருதினங்கள் நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்ற அசம்பிளிக்கு நமது மறைமாவட்டத்தில் இருந்து 15 பேர் MCA தலைவர் திரு. Y. வர்க்கீஸ் தலைமையில் கலந்து கொண்டனர். நமது மறைமாவட்ட ஓராண்டு அறிக்கையை செயலர் திரு. K.C. பிறைட் அவர்களால் ஆங்கிலத்தில் சபையில் படிக்கப்பட்டது. பலவிதமான நிகழ்வுகள் நடைபெற்றது. இயக்கத்தின் சட்ட திட்டங்கள் காலத்திற்கேற்ப மாற்றம் செய்ய விவாதிக்கப்பட்டு விரைவில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2026-ம் ஆண்டு செயல்திட்டத்தை நமது மறைமாவட்டத்திலும் தொடர்ந்து செயல்படுத்தவும், அனைவரையும் உறுப்பினர் ஆக்கவும் அனைவரும் உறுதி ஏற்றுக் கொண்டார்கள்.



# MCYM
## Youth Apostolate

✶ மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆட்சிமன்ற கூடுகையானது 25.01.2026 மேய்ப்புப்பணி நிலையத்தில் வைத்து நடைபெற்றது. புதிதாக பொறுப்பேற்கப்பட்ட மறைவட்ட பொறுப்பாளர்கள் இந்த புதிய ஆட்சி மன்ற கூடுகையில் பங்கேற்றனர். கடந்த 6 மாத மறைவட்ட இளையோர்களினுடைய செயல்பாடுகள் அறிக்கையாக வாசிக்கப்பட்டு ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மறைமாவட்ட ஒரு 6 மாத அளவிலான செயல்பாடுகள் அறிக்கையாக வாசிக்கப்பட்டது. அதை தொடர்ந்து புதிய மறைமாவட்ட பொறுப்பாளர்களுக்கான தேர்வு மறைவட்ட ஆட்சி மன்ற மற்றும் ஆலோசனை மன்ற உறுப்பினர்களுடைய பங்கெடுப்போடு நடைபெற்றது. இதில் புதிதாக மறைமாவட்ட பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் விபரம் :

| | |
|---|---|
| தலைவர் | தினேஷ் (மேக்கோடு) |
| செயலர் | அபிஷா (சூரியகோடு) |
| பொருளர் | ரஷிபா (மார்த்தாண்டம்) |
| துணைத்தலைவர் I | டெஃபின் (கணபதிக்கல்) |
| துணைத் தலைவர் II | ரெஜிதா (வெள்ளச்சிப்பாறை) |
| இணைச்செயலர் I | அஜின் (உண்ணாமலைக்கடை) |
| இணைச் செயலர் II | அபிஷா (தேனிக் குளம்) |
| ஆட்சி மன்ற உறுப்பினர் | ஜோஸ் மில்ட்டன் (ஜார்ஜ் நகர்) |
| ஆலோசனை மன்ற உறுப்பினர் | அபிஷேக் (காட்டுவிளை) |
| ஊக்குநர்கள் | Mr. ராஸ்டின், Miss. ஜாஸ்மின் |

புதிய மறைமாவட்ட பொறுப்பாளர்கள் மேதகு ஆயர் அவர்களுடைய முன்னிலையில் 26.01.2026 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து பொறுப்பேற்று கொண்டார்கள். மேதகு ஆயர் அவர்கள் அவர்களுக்கான தகுந்த ஆலோசனைகளும் முன்னோக்கிய திட்டங்களும் குறித்து சரியான ஒரு விளக்கமும் புதிய பெறுப்பாளர்களுக்கு வழங்கினார்.

## தாய்மார் சங்கம் (MCMF)

✶ MCMF செயற்குழு உறுப்பினர்கள் தேர்வானது 2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் தேதி கிறிஸ்து அரசர் பேராலய வளாகத்தில் வைத்து குருக்குல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் பிரைட் அவர்கள் தலைமையிலும், தாய்மார் சங்க இயக்குநர் அருட்சகோதரி ஷீபா ஜாண் அவர்கள் முன்னிலையிலும் MCMF புதிய பொறுப்பாளர்கள் தேர்வு நடைப்பெற்றது.

**பொறுப்பாளர்களின் விவரம் வருமாறு :**

தலைவர் : திருமதி மினி, மரியாகிரி
துணைத் தலைவர் : திருமதி கலா ராணி, பனச்சமூடு
செயலாளர் : திருமதி சுனிதா ராணி, செருப்பாலூர்
துணை செயலாளர் : திருமதி மேரி, லூசியா
பொருளாளர் : திருமதி ஈஷா, தேமானூர்
நிர்வாகக் குழு உறுப்பினர் : திருமதி சாந்தி, கிடாரக்குழி
நிர்வாகக் குழு உறுப்பினர் : திருமதி சுகிதா, செல்லங்கோணம்.






## மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

### பொங்கல் விழா

மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் பொங்கல் விழாவானது, 13/01/2006 அன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமானது. விழாவில் அனைத்து மாணவர்களும் வகுப்பு வாரியாக இணைத்து பொங்கலிட்டு மகிழ்ந்தனர். மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, கோலப்போட்டி, குழுபாடல் போட்டி, குழு நடனபோட்டி நடக்கப்பட்டது. தொடர்ந்து பெரும்பால மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்கும் வகையில் சிறப்பாக உறியடி நடத்தப்பட்டது. நம் கல்லூரியின் தாளாளர் அருட்தந்தை சதீஷ் குமார், நிதிகாப்பாளர் அருட்தந்தை கெபின், கல்லூரி முகல்வர் Dr. A. லெனின் பிரெட் அனைவரும் இணைந்து மாணவர்களுக்கு சிறப்பு பரசுகள் வழங்கி ஊக்குவித்தனர். இறுதியாக அனைவருக்கும். பொங்கல் இனிப்பு வழங்கப்பட்டது. இவ்விழா நிகழ்வினை பேராசிரியர் Dr. ஜாண்வின் பியூலா N.F. தலைமையில் அனைத்து பேராசிரியர்கள் அலுவலக ஊழியர்கள், பணியாளர்கள் இளைந்து சிறப்பித்தனர். விழா நிகழ்வுகள் மதியம் 2.00 மணி அளவில் இனிதே நிறைவடைத்தது.

### திருமண ஆயத்தப்பயிற்சி

**2026 பெப்ரவரி** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 20, 21 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# மறைவட்ட செய்திகள்

## பனச்சமூடு மறைவட்டம்

❖ மலங்கரை கத்தோலிக்க இளையோர் இயக்கம் சார்பாக பொங்கல் விழாவானது ஜனவரி 18-ஆம் தேதி பனச்சமூடு ஆலயத்தில் வைத்து மதியம் 2 மணிக்கு ஆரம்பமானது. நிகழ்ச்சியின் துவக்கமாக இளையோர்களுக்கான கோலப்போட்டி நடத்தப்பட்டது. Prof. அவர்களால் தலைமைத்துவம் மற்றும் தமிழ் கலாச்சாரத்தை பற்றிய வகுப்பும் பின்னர் புதிய பொறுப்பாளர்களின் பதவியேற்பும், ஆண்டு திட்ட வெளியீடும், கோலப்போடியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் தச்சூர்கோணம் பங்கு முதலிடத்தையும், புலியூர் சாலை பங்கு இரண்டாமிடத்தையும், காஞ்சியோடு பங்கு மூன்றாமிடத்தையும் தட்டிச்சென்றது.

## குலசேகரம் மறைவட்டம்

❖ குலசேகரம் மறைவட்ட தின விழாவானது 25-ஆம் தேதி பிற்பகல் 2:30 மணி அளவில் பேரணியுடன் ஆரம்பமானது. பேரணியை குமரன் குடி முன் பஞ்சாயத்து தலைவர் திரு. பால்சன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மறைவட்டத்தின் ஒவ்வொரு பங்குகளிலிருந்தும் கடந்து வந்த இறைமக்கள் இப்பேரணியில் கலந்துகொண்டனர். மேதகு ஆயர் அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை தாங்கினார்கள். மேலும் மறைவட்ட தினவிழாவிற்கு சிறப்பூட்டும் விதமாக ஜெர்மன் நாட்டைச் சார்ந்த 30 விருந்தினர்களும் கலந்து கொண்டார்கள். முதலில் மேதகு ஆயர் அவர்களுக்கும் விருந்தினர்களுக்கும் மற்றும் இறைமக்கள் சமூகத்தினருக்குமாக பாரம்பரிய முறைப்படியிலான ஆரத்தி எடுக்கப்பட்டு அனைவரும் வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து ஒவ்வொரு பங்குகளில் இருந்தும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு கலை இரவு ஆனது மேதகு ஆயர் அவர்களுடைய ஆசீர்வாதத்தோடு இனிதே நிறைவுற்றது. பங்குகொண்ட அனைத்து இறைமக்களுக்கும் அன்பின் விருந்தும் வழங்கப்பட்டது.



❖ மாத்தார் பங்கில் பணிபுரிகின்ற அருட்சகோதரி ஜானட் மேரி அவர்களின் வெள்ளிவிழா கொண்டாட்டமானது 31-ஆம் தேதி மாத்தார் புனித சூசையப்பர் தேவாலயத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. காலை 10:30 மணி அளவில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலியை தொடர்ந்து வாழ்த்து கூட்டம் நடைபெற்றது. குலசேகரம் மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ், மேரி மக்கள் துறவற சபையின் மார்த்தாண்டம் மாகாண தலைவி மதர் ரோஸ் பிரான்சிஸ் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள். இதில் ஏராளமான குருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் இறை மக்கள் கலந்து கொண்டு அருட் சகோதரி அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். அன்பின் விருந்துடன் வெள்ளிவிழா கொண்டாட்டங்கள் இனிதே நிறைவுற்றது.

## நாகர்கோவில் மறைவட்டம்

❖ **தூய தைநேசி மாதா திருத்தல தேவாலய திருவிழா**

நாகர்கோவில் மறைவட்டத்தின் கலங்கரை தீபமாய் வீற்றிருக்கும் தூய தைநேசி மாதா திருத்தல ஆலயத்தின் திருவிழாவானது, கடந்த ஜனவரி திங்கள் 11.01.2026 முதல் 15.01.2026 வரை வெகு விமரிசையாகவும், ஆடம்பரமாகவும் நடைபெற்றது. மேன்மைமிகு ஆயர், மறைமாவட்ட மூத்த குருக்களின் ஆசிமிகு திருப்பலியும், மறைவட்ட குருக்களின் இறைவார்த்தை பகிர்வும் திருவிழாவை மேலும் சிறப்புறச் செய்தது. தூய தைநேசி மாதாவின் அரவணைப்பில், ஆன்மீக ஒளி ஆடம்பரமாக தழைத்தோங்கிய இத்திருவிழாவில், மலங்கரைக் கத்தோலிக்கர் அல்லாத ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்று இறையாசீர் பெற்றனர். எல்லா சனிக்கிழமைகளிலும் தூய தைநேசி மாதாவின் பரிந்துரை நாடி நடைபெறும் உபவாசக் கூட்டத்தில், கடந்த வருடத்தில் (2025) மட்டும் சுமார் 16 சாட்சியங்கள் பகிரப்பட்டன. இவ்வருட திருவிழாவில் கூடுதல் பக்தர்கள் வருகை தந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆயரின் ஜனவரி மாத நிகழ்வுகள்



- 2 ➢ பட்டம் பேராலயத்தில் வைத்து நடைபெற்ற மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரும் தந்தையுமாகிய மோறோன்மோர் பசலியோஸ் கிளீமிஸ் காதோலிக்க ஆண்டகையின் நாமவிழா திருப்பலியில் பங்கேற்று செபித்தார்.
- 4 ➢ பத்தனம்திட்டை மறைமாவட்டம் தோட்டக்காவு தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- 4 ➢ செறியநாடு புனித யூதாததேயு திருத்தலத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- 5 ➢ மரியாகிரியில் புதுமனையை திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.
- 6 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் நம் ஆண்டவர் இயேசுவின் திருமுழுக்கு திருவிழா திருப்பலி நிறைவேற்றி சைத்து எண்ணெயையும் ஆசீர்வதித்தார்.
- 7 ➢ அருட்சகோதரி ஹைசிந்து அவர்களின் இறுதிச் சடங்குகளை நிறைவேற்றினார்.
- 9 ➢ செல்லங்கோணம் பள்ளி ஆண்டுவிழாவில் தலைமையேற்று ஆசியுரை வழங்கினார்.
- 9 ➢ கிராத்தூர் மார் கிரிகோரியஸ் பள்ளி ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு ஆசியுரையாற்றினார்.



- 10 ➢ காதோலிக்கேட் மையத்தில் பொதுநிலையினருக்கான இறையியல் வகுப்பினையெடுத்து அவர்களுக்காக திருப்பலியும் அர்ப்பித்தார்.
- 10 ➢ கன்னியாகுமரியில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார்.
- 11 ➢ கீழ்மாங்கோடு தேவாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி ஜூபிலியை நிறைவு செய்து வைத்தார்.
- 11 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட பாலர்சபை ஆண்டு விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.
- 11 ➢ பார்வதிபுரம் தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மையும் வழங்கி ஆசீர்வதித்தார்.
- 12 ➢ வெட்டூர்ணிமடத்தில் திருமண அருளடையாளத்தை நிறைவேற்றினார்.
- 12 ➢ கருங்கலில் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதித்தார்.
- 13 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் கன்னியர் மாகாண இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றினார்.
- 13 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்களுக்கு திருவழிபாட்டு ஆண்டு இறையியல் கையேடு பற்றிய வகுப்பை நடத்தினார்.
- 14 ➢ பெருவிளை புனித தேவசகாயம் திருத்தலத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் வழங்கினார்.
- 14 ➢ ஆரல்வாய்மொழியில் புனித தேவசகாயத்தை இந்திய நாட்டின் பொதுநிலையினரின் பாதுகாவலராக அறிவிக்கும் பெருவிழா திருப்பலியில் கலந்து கொண்டார்.
- 15 ➢ தேவதானப்பட்டி மறைபரப்பு தளத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி, உறுதிபூசுதல், புதுநன்மை போன்ற அருளடையாளங்களை நிறைவேற்றி மறைத்தூதுவப் பணிகளை ஆசீர்வதித்தார்.
- 16 ➢ மார் எப்ரேம் கல்லூரியில் வைத்து நடைபெற்ற மறைக்கல்வி மாணவர் சங்கத்தில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.
- 16 ➢ மாடத்தட்டுவிளை புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருவிழா திருக்கொடியேற்றி மறையுரை வழங்கி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

- 17 ➢ பட்டம் பேராலயத்தில் வைத்து நடைபெற்ற மறைந்த பேராயர் சிறில் மார் பசேலியோஸ் ஆண்டகையின் நினைவுத் திருப்பலியில் கலந்து கொண்டு தூபம் அர்ப்பித்து செபித்தார்.
- 18 ➢ கோயம்புத்தூர் தியான மையத்தில் நற்செய்திப் பெருவிழாவினை வழிநடத்தினார்.
- 19 ➢ கிறிஸ்தவர் ஐக்கியப் பேரவை சார்பாக நடைபெற்ற நிசேயா திருச்சங்க கருத்துரையை தலைமையேற்று வழிநடத்தினார்.
- 21 ➢ சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு ஆயர் பேரவை கூட்டத்தில் கலந்து கொண்டார்.
- 23 ➢ மாவேலிக்கரை மறைமாவட்டம் செங்கன்னூரில் நினைவுத் திருப்பலி அற்பித்தார்.
- 24 ➢ மசிக பள்ளிகளிலிருந்து இந்த ஆண்டு ஓய்வுபெறும் ஆசிரியர்களின் வாழ்த்துக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார்.
- 25 ➢ சேறோட்டுக்கோணம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- 25 ➢ குலசேகர மறைவட்ட தினத்தில் கலந்து கொண்டு இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- 26 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட மறைக்கல்வி ஆசிரியர் சங்கமத்தில் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்.
- 26 ➢ திருத்தூயகப் பணியாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு திருவழிபாட்டின் இன்றியமையாத் தன்மையை விளக்கிக் கூறினார்.
- 27 ➢ தஞ்சாவூரில் வைத்து நடைபெற்ற 'Labour Commission' கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.
- 29 ➢ C.S.L ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு மாணவர்களை ஆசீர்வதித்தார்.
- 29 ➢ மங்குழி பள்ளி ஆண்டு விழாவில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்.
- 30 ➢ அணக்கரை பள்ளி ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்.



## இம்மாதம் நினைவு கூர

பெப்ருவரி 2026

1 – கொஹனே ஞாயிறு (குருக்களின் நினைவு)
காதோலிக்கா தினம்
2 – மாயல்தோ (நம் ஆண்டவரின் தேவாலய நுழைவு)
3 – மார் சிமியோன், மார்த்தா அன்னா
4 – புனித ஜாண் பிரிட்டோ


4

8 – ஆனிதே ஞாயிறு (விசுவாசிகளின் நினைவு)
மலங்கரை கத்தோலிக்க பாலர் சபை தினம்
9 – ஆபிரகாம் மார் யூலியோஸ் ஆண்டகையின் ஆயர் திருநிலைப்பாடு
10 – மலங்கரை கத்தோலிக்க உயர் பேராய திருஆட்சிப்பீடம் நிறுவப்பட்ட நாள்
11 – புனித லூர்து அன்னை


11

13 – இறைவாக்கினர் ஆகாய்
14 – மார் க்சூஸ்தோஸ்
15 – பெரிய நோன்பு காலம்
கொத்தினே ஞாயிறு
பெரிய நோன்பின் முதல் ஞாயிறு
16 – சுபுகோனோ
19 – மார் ஈசாக்கு


19

ஜோசப் மார் தோமஸ் ஆண்டகையின் ஆயர் திருநிலைப்பாடு
21 – மார் எஃப்ரேம், மார் தியடோர் நினைவு
22 – கர்போ ஞாயிறு, பெரிய நோன்பின் இரண்டாம் ஞாயிறு
தோமஸ் மார் தியோஸ்கோறஸ் ஆண்டகையின் நினைவு
திருத்தூதர் பேதுருவின் அந்தியோக்கியா திருஆட்சி பீடம் நிறுவிய நாள்
திருவனந்தபுரம் பேராலயம் அர்ச்சிக்கப்பட்ட நாள்
23 – சிமிர்ணாவின் புனித போளிக்கார்ப்
மேத்யூஸ் மார் போனிகோர்போஸ் ஆண்டகையின் பெயர்விழா
24 – திருமுழுக்கு யோவானின் தலை கண்டெடுக்கப்பட்ட நாள்
25 – அருளாளர் ராணி மரியா
28 – இறைவாக்கினர் ஒபதியா

## குருமட செய்திகள்



## புனித தேவசகாயம் திருத்தல திருவிழா



## சிறார் இயக்க ஆண்டு விழா



## மறைபரப்பு தளச் செய்திகள்




## மலங்கரை கத்தோலிக்க மறைக்கல்வி




## MIDS




## Health for One Million (HOM)




## MCA



## MCYM




## மறைவட்ட செய்திகள்

